# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்
## 05.08.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் 55வது அதிகாரத்தின் 27, 28 வரையுள்ள வசனங்களை ஓதினார்கள்:**

*பொருள்: (பூமியாகிய) இதன் மீது உள்ளவையெல்லாம் அழியக்கூடியவையே. புகழுக்கும் கண்ணியத்திற்கும் உரிய உம் இறைவனின் அருள் நிலைத்திருக்கும். (55:27-28)*

**இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

எல்லாப் பொருள்களும் அழியக்கூடியதாகும். உனது இறைவன் ஒருவனே நிலைத்திருப்பான். இன்னோரிடத்தில் கூறுகின்றார்கள்: இறைவன் தன்னைத் தவிர மற்ற ஏனைய அனைத்திற்கும் மரணத்தை கண்டிப்பானதாக ஆக்கி விட்டான். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மஹ்மூத் கி ஆமீன் என்ற பெயரில் எழுதிய ஒரு உருது கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள். இந்தக் கவிதையை அவர்கள் தமது மூத்த மகன் ஸய்யதுனா முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் ஆமீன் வைபவத்தின் போது எழுதினார்கள். இந்தக் கவிதை துஆ மற்றும் அறிவுரை நிறைந்ததாகும். இந்தக் கவிதையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடன் தமது இன்னும் இரண்டு மகன்களையும் சேர்த்துள்ளார்கள். ஆனால் இந்த அறிவுரையில் முழு ஜமாஅத்தும் அடங்கும். இது ஒரு மிக நீண்ட கவிதையாகும். இந்தக் கவிதையின் ஓரிடத்தில் உலகம் தற்காலிகமானதாகும் என்றும் இதில் அதிக ஆர்வம் காட்டக்கூடாது எனவும் கவனமூட்டியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள். உலகம் ஒரு தற்காலிகத் தங்குமிடமாகும். இதில் நூறு ஆண்டுகள் வாழ்ந்தாலும் இறுதியில் பிரிவு என்பது உறுதியாக உண்டு. இது நிரந்தரமற்ற வீடாகும். எனவே இங்கு யாரும் யாரையும் குறை கூற முடியாது என்று கூறுகின்றார்கள்.

எனவே இக்காலகட்டத்தின் இமாம் மனிதனை இறைவனுடன் சேர்க்கவே தோன்றினார்கள். அவர்கள் தமது சந்ததிகளின் மகிழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் தமது சந்ததிகளுக்கும், தமது ஜமாஅத்திற்கும் நமது உண்மையான மகிழ்ச்சி என்பது இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துவதிலும் அவனது விருப்பத்தைப் பெறுவதிலுமே உள்ளது என்று கவனமூட்டுகிறார்கள். உலகம் மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறது. அப்போது விதவிதமான பித்அத்துகளை வளர்க்கிறது. வீணானவற்றைப் பின்பற்றுகிறது. வெளிக்காட்டுவதற்காக மகிழ்ச்சியைக் கொண்டாடுகிறது. ஆனால் நமது எல்லா விதமான கவனமும் நமது இறைவனின் பக்கமே இருக்க வேண்டுமென ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கற்றுத் தந்துள்ளார்கள். எனவே நமது ஒவ்வொரு செயலும் இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக இருக்க வேண்டும். நமக்கு இந்தக் கருத்தின் ஆழம் புரிந்து விட்டால், நாம் துக்கம் அல்லது மகிழ்ச்சியை அனுசரிப்பது இறைவனின் விருப்பத்தைப் பெறுவதற்காக அமையும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நோக்கத்தை முழுமைப்படுத்தவே தோன்றினார்கள். இவர்களின் சந்ததிகள் இறைவனை நேசிப்பவர்களாக உள்ளனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது கொண்ட நேசத்தில் மூழ்குபவர்களாவர். மேலும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் மீது இறங்கிய இறுதி ஷரீஅத்தாகிய திருக்குர்ஆனை ஓதி அதன்படி செயலாற்றுபவர்களாவர். இதை விட அவர்களுக்கு மகிழ்ச்சிக்குரிய விஷயம் வேறு எதுவாக இருக்க முடியும்?

எனவே ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் திருக்குர்ஆனை முதன்முறையாக முழுவதும் ஓதி முடித்தவுடன், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு விருந்திற்கான ஏற்பாடு செய்தார்கள். அந்த சந்தர்ப்பத்திற்காக குறிப்பாக இந்தக் கவிதையை இயற்றினார்கள். இதன் ஒவ்வொரு கவிதை வரிகளும்

நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று வேதனை மிகுந்த துஆக்கள் மற்றும் இறைவனைப் புகழ்வது மற்றும் அறிவுரையால் நிறைந்து காணப்படுகிறது. இந்த மகிழ்ச்சிகரமான சூழ்நிலையிலும் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் முன்மாதிரியைப் பின்பற்றியவாறு தமது சந்ததிகளுக்கும் தம்மைப் பின்பற்றுபவர்களுக்கும் உலகம் மற்றும் உலகப் பொருட்களின் மீது அதிக ஆர்வம் காட்டாதீர்கள் என்று அறிவுறுத்தினார்கள். இறைவனை எப்போதும் ஞாபகம் வைத்திருங்கள். இதுவே வாழ்வின் நோக்கமாகும் என்றார்கள். ஒரு நேரம் வரும் போது உலகம் மற்றும் இந்த உலகப் பொருட்கள் யாவும் இங்கேயே இருந்து விடும். மனிதன் இவ்வுலகை விட்டுப் போய் விடுவான். இந்த வீடு நிரந்தரமற்றதாகும். எனவே இங்கு யாரும் யாரையும் குறை கூற முடியாது. இவ்வுலகமும் இங்குள்ள பொருள்களும் நிரந்தரமானவையல்ல என்னும் போது இதில் உள்ளத்தை லயிக்க வைப்பதும் வீணானதாகும். எனவே யார் யாரிடம் புகார் கூற முடியும்? நிரந்தரமாக பலன்பெற வேண்டுமென்றால் நிரந்தரமாக நிலைத்திருக்கும் அந்த இறைவனிடமிருந்து தான் பலன்பெற முடியும். மேலும் நிரந்தரமாக நிலைத்திருப்பது மகத்துவமும் கண்ணியமும் மிகுந்த இறைவன் ஒருவனே ஆவான்.

நான் ஓதிய திருக்குர்ஆன் வசனத்தில் இறைவன் இரண்டு முக்கிய அம்சங்களின் பால் கவனமூட்டியுள்ளான். ஒன்று எல்லாப் பொருள்களும் அழியக் கூடியதாகும். மெல்ல மெல்ல பொருட்கள் யாவும் அழிவை அடையும். மேலும் ஒவ்வொரு மனிதனின் இறுதி கட்டம் மரணமாகும். இரண்டாவது ஈமான் கொண்டவர்களும், இறைவனின் விருப்பத்தைப் பெற முயற்சி செய்பவர்களும், இறைவனைத் தேடுகின்ற இறை அடியார்கள் தமது சந்ததிகளை நன்மையில் நிலைத்திருக்க வேண்டும் என்று தர்பிய்யத் செய்பவர்கள், தமது ஆன்மீகத்தில் முன்னேற எந்நேரமும் தயாராக இருப்பவர்கள், திருக்குர்ஆனின் போதனைகளைப் பின்பற்ற முயற்சி செய்பவர்கள், பௌதீக வாழ்க்கையை கடந்து விடுகின்றனர். ஆனால் இன்னொரு வாழ்க்கையும் உள்ளது. அது நிரந்தரமான வாழ்வாகும். அது இவ்வுலக வாழ்க்கையை முடித்து விட்டு சென்ற பின் மனிதனுக்குக் கிடைக்கிறது. அதை அவர்கள் அடைந்து விடுகின்றனர். அவர்கள் மறுவுலகில் இறைவனது அன்பின் அரவணைப்பில் வந்து விடுகின்றனர். இறைவனின் புறமிருந்து நேசம் மிகுந்த ஓசையைக் கேட்கின்றனர்.

வா! வந்து எனது சிறப்பிற்குரிய அடியாரில் நுழைந்து விடுக. வா! எனது சொர்க்கத்தில் நுழைந்து விடுக (89:30-31) என்று இறைவன் கூறுகின்றான்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இக்காலத்தில் மனிதனை இறைவனுடன் சேர்ப்பதற்காக தோன்றினார்கள். ஃபத்குலி ஃபீ இபாதி என்பதன் கருத்தைப் புரிய வைப்பதற்காகத் தோன்றினார்கள். மனிதனை நிரந்தரமான சொர்க்கத்திற்கும், நிரந்தர வாழ்விற்கும் வாரிசாக்குவதற்காகத் தோன்றினார்கள். மகிழ்ச்சியின் சந்தர்ப்பத்தில் இயற்றப்பட்ட அந்த கவிதையில் நிரந்தர வாழ்வைத் தேடுங்கள் என்று கூறுகிறார்கள். ஏனென்றால் இறைவனை அடையாமல் நிரந்தர வாழ்வு கிடைக்காது. திருக்குர்ஆனில் சூரா கஸஸ் -ல் இறைவன் கூறுகின்றான்:

*அல்லாஹ்வையன்றி வேறெந்த கடவுளரையும் நீர் அழைக்காதீர். அவனையன்றி வணக்கத்திற்குரியவன் எவனும் இல்லை. அவனைத் தவிர அனைத்தும் அழியக் கூடியவையே. தீர்ப்பு அவனுக்கே உரியது. மேலும் நீங்கள் யாவரும் அவனிடமே திருப்பப்படுவீர்கள். (28:89)*

எனவே நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டிய கருத்து இதுவாகும். இந்த வழிமுறையை நாம் அடைய வேண்டும். இதுவே நமது பிறப்பின் குறிக்கோளாகும்.

இறைவன் கூறுகின்றான்: *நாம் ஜின்னையும் மனிதனையும் நம்மை வணங்குவதற்காக அன்றி படைக்கவில்லை. (51:57)*

எனவே இறைவணக்கத்திற்கான கருத்தை நாம் இதன்படி செயல்பட முயற்சி செய்யும் போதுதான் புரிந்து கொள்ள முடியும். லாயிலாஹ இல்லாஹு - அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியது வேறெதுவுமில்லை என்ற உறுதியான நம்பிக்கையில் நிலைத்திருக்க வேண்டும். அனைத்துமே

அழியக்கூடியதாகும். அல்லாஹ்வின் கவனம் இல்லாத மற்ற எல்லாம் அழியக்கூடியதாகும். நல்ல எண்ணத்துடன் அவனை வணங்க முயற்சி செய்பவர்களுக்கே அல்லாஹ்வின் கவனம் இருக்கும். அவன் ஒருவனே என்று நம்பிக்கை கொண்டு அவனது கட்டளைகளின்படி செயல்படுபவர்கள் மீது இறைவனது கவனம் இருக்கும். இறைவன் நமக்கு இபாதத் செய்வதற்கான வழிகளைக் கற்றுத் தந்துள்ளான். அதே சமயம் இறை வணக்கத்தின் உயர் தகுதியை அடைவதற்கும் அதை சரியான முறையில் மெருகூட்டுவதற்கும் நமக்கு பல்வேறு சந்தர்ப்பங்களும் வழங்கியுள்ளான். தற்போது நாம் அருளுக்குரிய ரமலான் மாதத்தைக் கடந்து வருகிறோம். நாம் நம்மைப் படைத்த இறைவனை அடையாளம் கண்டு நம்மை அழிவிலிருந்து பாதுகாக்கவே ரமலான் மாதம் வருடந்தோறும் வருகிறது. இதில் நாம் நமது நன்மைகளின் தகுதிகளை உயர்த்த வேண்டும். நமது ஆன்மீகத் தகுதிகளை மேம்படுத்த வேண்டும். இந்த சந்தர்ப்பங்களிலிருந்து பலன் பெறுபவர்கள் மிகவும் பேறுபெற்றவர்களாவர். இவர்கள் இறைவனின் உண்மையான நல்லடியார்களாக ஆவதற்கு எப்போதும் முயற்சி செய்பவர்களாவர் என்பதை எப்போதும் நினைவில் கொள்பவர்கள் தான் நிரந்தர மனப்பான்மையுடன் இறைவனை வணங்குபவர்களாவர். இறைவன் ஒருவனுக்கு தான் எப்போதும் அழிவும் இல்லை. மரணமும் இல்லை. நாம் மரணத்திற்குப் பிறகு அவனிடம் ஆஜர்படுத்தப்படுவோம். அங்கு நமது செயல்களுக்கு கணக்கு எடுக்கப்படும். எனவே குல்லு ஷய்யின் ஹாலிகுன் என்பதில் இறைவன் நமக்கு பாடம் புகட்டுகிறான். மரணம் என்பது நிச்சயமாக உண்டு. இதிலிருந்து தப்பி ஓடவே முடியாது. மரணத்திலிருந்து எந்த மனிதனும் தப்பிக்க முடியாது. ஆனால் இறைவனின் கவனத்தில் தம்மை மாய்த்துக் கொள்பவர்கள் ஒரு புதிய வாழ்க்கையைப் பெறுகின்றனர். அவர்கள் அல்லாஹ்வின் அன்பின் அரவணைப்பில் வந்து விடுகின்றனர். இங்கு நான் மீண்டும் அதே கருத்தின் பக்கம் செல்கிறேன். இறைவனின் கவனத்தில் யார் தம்மை மாய்த்துக் கொள்கின்றரோ? அவர்கள் தமது பிறவியின் நோக்கத்தைத் தெரிந்து கொள்கின்றனர். அவர்கள் தமது பிறவியின் நோக்கத்தை தெரிந்து கொண்டவர்களாவர். இதன் அடிப்படையில் தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்பவர்களாவர். எனவே இவ்வுலகிலேயே இக்கருத்தைப் புரிந்து கொள்ள முயற்சி செய்பவர்கள் பேறுபெற்றவர்களாவர். அவர்கள் இதன்படி செயலாற்ற முயற்சி செய்கின்றனர். இறைவன் நம்மில் ஒவ்வொருவரும் இக்கருத்தைப் புரிந்து இதன்படி செயலாற்றும் நல்வாய்ப்பினை வழங்குவானாக! நமது முன்னோர்கள் புரிந்து கொண்டு அடைய முயற்சி செய்தபடி நாமும் அதை புரிந்து வழி நடக்க இந்த ரமலான் நம்மை நன்மைக்கு நெருக்கமானவர்களாக ஆக்கட்டுமாக! நமது முன்னோர்கள் இந்த வழியில் நடப்பதற்காக துஆவும் முயற்சியும் செய்தனர். புதிய சந்ததிகளாகிய நாம் நமது நிலைகளை அதன்படி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக முயற்சி செய்தார்கள். நமது அன்பிற்குரியவர்களுள் நமது சான்றோர்களுள் யாராவது நம்மை விட்டுப் பிரியும் போது நமக்கு இக்கருத்தின் பக்கம் கவனம் ஏற்படுகிறது. இறைவனின் மீது உறுதியான நம்பிக்கையுடைய ஒருவருக்கு இதன் பக்கம் கவனம் பிறக்க வேண்டும்.

கடந்த நாட்களில் எனது தாயார் வஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். நான் அவர்களது வாழ்க்கையை சிந்திக்கும் போதெல்லாம் அவர்களது இறைவணக்கத்தின் உயரிய தகுதி நமக்கு தென்படுகிறது. திருக்குர்ஆனை ஆழ்ந்த சிந்தனையுடன் மணிக்கணக்கில் அவர்கள் ஓதி வந்தது நமக்கு ஒரு முன்மாதிரியாகத் தென்படுகிறது. அவர்கள் தொழுகையில் காட்டிய ஈடுபாடு, மக்ரிப் தொழுகையை இஷா வரைக்கும் நீட்டித் தொழுவார்கள். பிறகு இஷா தொழுகையை மணிக்கணக்கில் ஈடுபாட்டுடன் தொழுதது என் முன்னால் ஒரு முன்மாதிரியாகும். எனது தாயார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது காலத்தைக் காணவில்லை. எனினும் தொடக்கக் காலத்தைப் பார்த்துள்ளார்கள். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் அன்பையும் துஆவையும் பெற்றுள்ளார்கள். சஹாபா மற்றும் சஹாபியாக்களிடமிருந்து பலன் பெற்றார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு நெருக்கமான காலத்தின் விளைவின் கீழ் இருந்ததாலும் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மூத்த மகள் மற்றும் பிள்ளைகளில் இரண்டாவது பிள்ளை என்பதன் காரணமாகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அருகாமையிலிருந்து நேரடியாகப் பலன் பெற்றவர்களின் அருகாமையில் இருந்ததன் விளைவு அவர்களிடம் வெகுவாகத் தென்பட்டது. அவர்கள் எழுவதும், உட்கார்வதும், பேசுவதும், நடப்பதும் ஆகிய அன்றாட நடத்தையிலும் ஒரு கண்ணியம் இருந்தது. இந்தக் கண்ணியம் ஒரு மூஃமினிடம் தென்பட வேண்டும். இறைவனை நேசிக்க வேண்டும் என்பதில் ஒரு துடிப்பு இருந்தது. இந்தத் துடிப்பை அவர்கள் தாம்

இயற்றிய கவிதைகளிலும் வெளிக்காட்டியுள்ளார்கள். தொழுகையில் அவர்கள் காட்டிய அதிக ஈடுபாட்டை நான் பார்த்ததால் அவர்கள் இயற்றிய கவிதை பள்ளத்தாக்குகளில் கவிதைகள் கூறித்திரிபவர்கள் இயற்றும் கவிதைகளைப் போன்றதல்ல என்று நிச்சயமாக நான் கூறுவேன். மாறாக அது உள்ளத்தின் ஓசையாக இருந்தது. எனது தாயார் இயற்றிய ஒரு கவிதையின் சில வரிகளை நான் உங்கள் முன் வைக்கிறேன். அவர்கள் இறைவனைப் பார்த்து இவ்வாறு கூறுகின்றார்கள்:

> அன்பும் கருணையும் அருளும் உனதாகும். நான் ஒவ்வொரு கணமும் உனது விருப்பத்தை விரும்புகிறேன். கட்டுப்படுவதில் எல்லாவற்றையும் இழந்து நான் எஜமானருடைய இருப்பிடத்தை வந்தடைய விரும்புகிறேன். எனது உள்ளத்தின் அறைகளில் நீ ஒருவனே நிலைத்திருக்க வேண்டும். நான் உனது கருணையின் போர்வையை விரும்புகிறேன்.

ஒருமுறை ஒரு ஜனாஸா கடந்து சென்று கொண்டிருந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அப்போது சஹாபாக்களுடன் அங்கு நின்று கொண்டிருந்தார்கள். இறந்தவரை சஹாபாக்கள் புகழ்ந்துரைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் வாஜிபாகி விட்டது என்றார்கள். பிறகு என்ன வாஜிபாகி விட்டது? என்று கேட்ட போது அவர்களுக்கு சொர்க்கம் வாஜிபாகி விட்டது என்று கூறினார்கள்.

ஏனென்றால் ஒருவருடைய நன்மைகளை மக்கள் புகழ்ந்துரைத்தால் இறைவன் மன்னிப்பதற்கான ஏற்பாட்டை செய்து விடுகின்றான். எனது தாயாரின் வஃபாத்தையொட்டி எனக்கு பல எண்ணற்ற இரங்கல் கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. அவர்களுடன் நேரடித் தொடர்பில் இருந்தவர்கள் எல்லாரும் அவர்களது சிறப்புப் பண்புகளைப் புகழ்ந்து எழுதியுள்ளார்கள. எனவே இந்த பல்வேறு கடிதங்களினால் அல்லாமல், நானும் அவர்களைப் பார்த்துள்ளேன். இதிலிருந்து எனக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. நான் இதற்காக துஆ செய்கிறேன். நான் உனது கருணையின் போர்வையை விரும்புகிறேன் என்ற இவர்களது துஆவை இறைவன் ஏற்றுக் கொண்டவாறு தனது மன்னிப்பு மற்றும் கருணையின் போர்வையில் போர்த்தியிருப்பான்.

என் அன்பிற்குரிய இறைவா! என் தாயார் தமது இந்த துஆவில் விரும்பியதற்கிணங்க நீ அவர்களுடன் நடந்து கொள்வாயாக! அவர்களுடைய சந்ததிகளாகிய எங்களையும் இக்கருத்தைப் புரிந்து கொள்பவர்களாக ஆக்குவாயாக! இவ்வுலகிலும் மறுவுலகிலும் எங்களையும் உனது கருணையின் போர்வையில் மூடி வைப்பாயாக! அவர்கள் தமது சந்ததிகளிடம் வைத்திருந்த எதிர்பார்ப்பை விட்டு விலகுபவர்களாக நாங்கள் ஆகி விட வேண்டாம். மாறாக இறைவன் அவர்களது வருங்கால சந்ததிகளுக்கும் உனது கருணை கிடைக்க நல்வாய்ப்பினை வழங்குவானாக!

அவர்களைப் பற்றி சுருக்கமாக நான் ஒரு சில விஷயங்களை எடுத்துக் கூறுகிறேன். நான் ஏற்கனவே கூறியது போன்று அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மூத்த மகளும் ஆவார்கள். குழந்தைகளுள் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களுக்குப் பிறகு இரண்டாவது குழந்தையாவார்கள். அவர்கள் ஸய்யிதா மஹ்மூதா பேகம் சாஹிபா அதாவது ஹஸ்ரத் உம்மே நாஸிர் என்ற பெயரால் அழைக்கப்பட்டவர்களின் வயிற்றில் அக்டோபர் 1911 –ல் பிறந்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உம்மே நாஸிர் அவர்களுடன் செய்த திருமணத்தைப் பற்றியும் சுருக்கமாகக் கூறுகிறேன். இந்த நிகாஹ் 1902 –ல் நடந்தது. ஹஸ்ரத் ஸய்யிதா மஹ்மூதா பேகம் ஹஸ்ரத் உம்மே நாஸிர் சாஹிபா கலீஃபா ராஷீதுத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் மகளாவார்கள். ஹஸ்ரத் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் அவர்கள் செய்த பொருள் தியாகத்தைப் பார்த்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒருமுறை இனி அவர் பொருள் தியாகம் செய்யாவிட்டாலும் பரவாயில்லை. இதுவரை அவர் செய்ததே அதிகமாகும் என்று கூறினார்கள். ஆனால் இவர் கடைசி காலம் வரை பொருள் தியாகம் செய்து கொண்டே இருந்தார்கள். 1902–ல் நிகாஹ் நடந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் டாக்டர் சாஹிபிற்கு இந்த வரனை முன்வைத்த போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிபிற்கு கடிதம் எழுதினார்கள். அதில் இவ்வாறு குறிப்பிட்டார்கள். இந்த வரன் மஹ்மூதிற்கும் பிடித்துள்ளது போல் தெரிகிறது. எனக்கு இல்ஹாமின் அடிப்படையில் இது தொடர்பாக எதுவும் தெரியவில்லை. ஆயினும்

மஹ்மூதின் விருப்பத்தின்படி இன்ஷா அல்லாஹ் இறைவனது விருப்பத்திற்கு ஏற்ப நடக்கும். நிச்சயமாக இந்த உறவு இறைவனின் விருப்பத்திற்கேற்ப நடந்ததாகும். அவர்களது மூத்த மகன் ஹஸ்ரத் ஹாபிஸ் மிர்ஸா நாஸிர் அஹ்மத் சாஹிப் அவர்களுக்கு இறைவன் கிலாஃபத்தின் போர்வையை அணிவித்தான்.

எனது தாயாரின் நிகாஹ் ஜுலை 2, 1934-ல் எனது தந்தையார் மிர்ஸா ஷரீஃப் அஹ்மத் சாஹிபின் மகன் மிர்ஸா மன்சூர் அஹ்மதுடன் நடந்தது. அதே வேளையில் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் நிகாஹ்வும் நடந்தது. இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் காதியானின் அக்ஸா பள்ளிவாசலில் மிகவும் நீண்ட குத்பாவை நிகழ்த்தினார்கள். இந்த இரண்டு நிகாஹ்வில் முதலாவது நிகாஹ் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் நிகாஹ்வாகும். இரண்டாவது நிகாஹ் நான் முன்னதாகக் குறிப்பிட்டது போன்று எனது தாயாரின் நிகாஹ்வாகும். இங்கு நான் அந்த குத்பாவின் சில பகுதிகளை எடுத்துக் கூறுகிறேன். இது பொதுவான முறையில் ஜமாஅத்திற்கும் சிறப்பான முறையில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் குடும்பத்தினருக்கும் உரியதாகும். அனைவருக்கும் இதைக் கேட்டு தமது பொறுப்புகளைப் பற்றிய உணர்வு ஏற்பட வேண்டும். எனது தாயார் எப்போதும் தனது மற்றும் பிறரது தர்பிய்யத்திற்காக பாடுபட்டு வந்தார்கள். அவர்களது தரம் உயர வேண்டும் என்று முயற்சி செய்து வந்தார்கள். இதன் மூலம் அவர்களுக்கும் நன்மை சேர வேண்டும். காரணம், அவர்களின் வஃபாத்தின் விளைவாக எனக்கு இதன்பால் கவனம் ஏற்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:**

**வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம்** என்பதன் கருத்து, ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் இரண்டாவது தோற்றமாகும். இதை அவர்கள் கூறக் காரணம் என்னவென்றால் நான் மீண்டும் தோன்றியுள்ளேன் என்று கூறும் அளவிற்கு ஒருவர் தோன்றினால் அவர் தஜ்ஜாலை எதிர்கொள்வார். இதை தவிர வேறு எந்த வழியும் இல்லை. இல்லையெனில் முஸ்லிம்கள் அந்த தஜ்ஜாலுடன் சண்டையிட்டு மரணித்து விடுவர். இந்த குழப்பத்தை எதிர்கொள்வதற்கு ரஸூல் (ஸல்) அவர்கள் இந்த முன்னறிவிப்பை வழங்கியுள்ளார்கள். இவ்வாறு கூறி அவர்கள் ஓர் அப்பீல் செய்துள்ளதாக தான் கூற வேண்டும். அதாவது இந்த குழப்பம் தோன்றும் போது பாரசீக வம்சத்திலிருந்து சிலர் எழுந்து எல்லா வித ஆபத்துகளையும் துன்பங்களையும் சகித்துக் கொண்டவாறு மீண்டும் உலகில் ஈமானை நிலைநாட்டுவார்கள். இது வெறும் முன்னறிவிப்பு மட்டுமல்ல. மாறாக ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் ஒரு விருப்பமாகும். இது அவர்கள் வைத்த நம்பிக்கையாகும்; எதிர்பார்ப்பாகும். இறைத் தூதர் பாரசீக வம்சத்தில் என்ன எதிர்பார்க்கின்றார்? என்று இந்த சொற்கள் எடுத்துக் கூறுகின்றன. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களது காலத்திலும் இந்தக் குழப்பம் ஆபத்தின் அடிப்படையில் மிகக் குறைவாகவும் விளைவின் அடிப்படையில் மிகக் குறைவாகவும், காலம் மற்றும் அதன் தாக்கத்தின் அடிப்படையில் மிகக் குறைவாகவும் குழப்பம் தோன்றியது. அப்போது சஹாபா பெருமக்கள் காட்டிய நடைமுறை வரலாற்றின் ஏடுகளில் இன்றும் எழுதி வைக்கப்பட்டுள்ளன என்று கூறிய பிறகும் சஹாபாக்கள் என்ன முன்மாதிரியைக் காட்டினார்கள்? என்பதை விளக்கினார்கள். எவ்வாறு அவர்கள் தமது உயிரை அர்ப்பணித்தார்கள் என்று விளக்கினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மக்கா வெற்றிற்குப் பிறகு நடந்த போரைப் பற்றி விவரித்தார்கள். அந்தப் போரில் புதிய முஸ்லிம்கள் அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டனர். அவர்களுக்கு எண்ணிக்கையின் மீது அதிக நம்பிக்கையும் பெருமையும் இருந்தது. ஆனால் காஃபிர்களின் அம்பு மழை போல் பொழிந்ததும் அதை அவர்களால் எதிர்கொள்ள முடியவில்லை. அந்த புதிய முஸ்லிம்களின் பலவீனத்தின் காரணமாகவும் அவர்களுக்கு பயிற்சி இல்லாததன் காரணமாகவும் அவர்களது குதிரைகள் சிதறி ஓடின. இது முந்தைய சஹாபாக்களின் வரிசையையும் சீர்குலைத்து விட்டது. அங்கு தடுமாற்றத்தை ஏற்படுத்தியது. இதன் காரணமாக அவர்களின் குதிரையும் சிதற ஆரம்பித்தது. இதன் விளைவாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் 10, 12 சஹாபாக்கள் மட்டுமே இருந்தனர். அப்போது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அன்ஸார்களை இவ்வாறு அழைக்குமாறு ஒரு சஹாபியிடம் கூறினார்கள். அன்ஸார்களே! இறைவனின் தூதர் உங்களை அழைக்கிறார் என்று அறிவிப்பு செய்யுமாறு கூறினார்கள். அப்போது அன்ஸார்களின் குதிரைகள் சிதறி இருந்தன. குதிரைகளைத் திருப்பிப் போர்க்களத்திற்கு கொண்டுவர கழுத்தை திருப்பினாலும் அவை திரும்ப மறுத்தன.

சஹாபாக்கள் அந்த சம்பவத்தை எடுத்துக் கூறும்போது நாங்கள் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து வலுவாக இழுத்து குதிரையின் கழுத்து பிடரியுடன் சேரும் அளவிற்கு வலுவாக இழுத்தோம். ஆனாலும் குதிரைகள் போர்க்களத்திற்குச் செல்லாமல் திரும்பி ஓட ஆரம்பித்தன என்று கூறினார்கள். அப்போது இறைவனின் தூதர் உங்களை அழைக்கிறார் என்ற குரலைக் கேட்டவுடன் எங்களது உடலில் ஒரு மின்னல் பாய்ந்தது போல் இருந்தது. சவாரியை அடக்க முயன்ற போது அது திரும்ப மறுத்தது. இவ்வாறு திரும்ப மறுத்த குதிரைகள் மற்றும் ஒட்டகங்களின் கழுத்துகளை வெட்டி சரித்து விட்டு நடந்து வந்து ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் முன்னால் ஒன்றுகூடிவிட்டோம் என்று சஹாபாக்கள் கூறுகின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: அந்த ஓசையை விட அதிக அன்புடன், அந்த ஓசையை விட அதிக எதிர்பார்ப்புகளுடன் இறைவனின் ரஸூல் (ஸல்) அவர்கள் 1300 வருடங்களுக்கு முன்னால், எனது உம்மத்திற்கு ஒரு காலம் வரும். அப்போது இஸ்லாம் அழிந்து விடும். அப்போது தஜ்ஜாலின் குழப்பம் உலகில் மிகைத்து விடும். ஈமான் அப்போது கைவிடப்படும். இரவில் மனிதன் மூஃமினாக இருப்பான். காலையில் அவன் காஃபிராகி விடுவான். காலையில் மூஃமினாக இருப்பவன் மாலையில் காஃபிராகி விடுவான். அப்போது ஃபார்ஸி வம்சத்திலிருந்து சிலர் எழுந்து என் புறமிருந்து எழுந்துள்ள ஓசைக்கு செவிகொடுப்பார்கள். பிறகு ஈமானை சுரைய்யாவிலிருந்து திரும்பக் கொண்டு வருவர். இதில் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ரிஜால் என்று கூறவில்லை. மாறாக ரஜுல் என்று கூறியுள்ளார்கள். இதன் பொருள் இஸ்லாத்தைப் பரப்ப வேண்டும் என்ற பொறுப்பு பாரசீகத்தின் ஒரு மனிதரோடு முடிவடைந்து விடாது. மாறாக அவருடைய சந்ததிகளின் மீதும் பொறுப்பு உள்ளது. ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஃபார்ஸியின் ஒரு மனிதர் மீது வைத்திருந்த அதே எதிர்பார்ப்புகளை அவர்களது சந்ததிகளிடமும் வைத்தார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் அவநம்பிக்கையின் காட்சியை எடுத்துரைத்தார்கள். அதில் சஹாபாக்களின் முகம் வெளிறி விட்டது. அவர்களது நெஞ்சம் துடிதுடித்தது. அவர்களது உள்ளத்திற்கு எழுச்சியூட்டுவதற்காக குரல் எழுப்பினார்கள். இந்த நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் அவர்கள் ஃபார்ஸியின் வம்சத்தினரிடத்தில் வைத்தார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள கூறுகின்றார்கள்: நான் இன்று அந்த அமானத்தையும் பொறுப்பையும் நிறைவேற்றுகிறேன். இன்று ஃபார்ஸி வம்சத்தின் சந்ததிகளாகிய அனைவருக்கும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் இந்த தூதுச் செய்தியை எட்ட வைக்கிறேன். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் முஹம்மதிய சமுதாயம் அழியும் போது வ ஆகரீன் மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம் என்ற எதிர்பார்ப்பை முன் வைத்துள்ளார்கள். மேலும் பாரசீக வம்சத்தைச் சேர்ந்த சந்ததிகள் உலக பேராசைகள் மற்றும் உலக முன்னேற்றங்களை விட்டு விலகி ஒரே பணியைச் செய்வதற்காக தம்மை அர்ப்பணித்து விடுவார்கள். அந்தப் பணி உலகில் இஸ்லாத்தின் கொடியை உயர்த்தும் பணியாகும். ஈமானை சுரைய்யாவிலிருந்து திரும்பக் கொண்டு வருவதாகும். இறை படைப்பினங்களை இறைவனின் சன்னிதானத்தில் கொண்டு வருவதாகும். இந்த எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் இறைவனின் தூதர் வெளிப்படுத்தினார்கள். இதை நான் அவர்களின் முன் வைக்கிறேன். இதற்கு அவர்கள் என்ன பதில் கொடுப்பார்கள்? அவர்கள் எனது சந்ததிகளாயினும், எனது சகோதரர்களின் சந்ததிகளாயினும் சரி அவர்கள் மனதில் நன்றாக சிந்தித்து தமது இயல்பிடம் இந்த குரலுக்குப் பிறகு அவர்கள் மீது என்ன பொறுப்புகள் சுமத்தப்படுகிறது என்பதைக் கேட்க வேண்டும்.

பாரசீக வம்சத்தைச் சேர்ந்த நாங்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இந்த வேதனை மிகுந்த தூதுச் செய்தியைப் புரிந்து கொண்டு எமது பொறுப்புகளைச் சரியாக நிறைவேற்றுபவர்களாக இறைவன் ஆக்குவானாக! எங்களது சந்ததிகள் இந்தப் பொறுப்புகளை நிறைவேற்பவர்களாக ஆகட்டுமாக! எங்களது குடும்பத்தின் சான்றோர்களில் ஒருவர் நம்மை விட்டு பிரிந்துள்ளார்கள். அவர்களின் பிரிவு குடும்ப உறுப்பினர்களுக்கு குறிப்பாகவும் ஜமாஅத் உறுப்பினர்களுக்கு பொதுவாகவும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் தமது ஜமாஅத்திடம் ஒப்படைத்த பொறுப்புகளை நினைவூட்டுவதாக அமைய வேண்டும். நமது பொறுப்புகளை ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் பல்வேறு இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்கள். நான் ஜமாஅத்தின் எந்த உயரிய தகுதியைப் பார்க்க விரும்புகிறேன் என்று அவர்கள் குறிப்பிட்டுக் கூறியுள்ளார்கள்.

நான் எனது தாயாரின் வாழ்க்கையிலிருந்து பல்வேறு சம்பவங்களை எடுத்துக் கூறுகிறேன். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அந்தக் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப அவர்களுக்கு ஆன்மீக மற்றும் பௌதீகக் கல்வியை வலியுறுத்திப் படிக்க வைத்தார்கள். அவர்களுக்கு F.A. வரைக்கும் கல்வியைக் கற்பித்தார்கள். பிறகு ஸய்யிதா அமத்துல் அஸீஹ் சாஹிபா (ரலி) அவர்களின் மறைவுக்குப் பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பெண்களின் தர்பிய்யத்திற்காக எனது மனதில் ஒரு திட்டம் தோன்றியுள்ளது என்று கூறினார்கள். அதன் செயல்பூர்வமான வெளிப்பாடு மார்ச் 17, 1925-ல் ஆனது. அப்போது ஒரு மத்ரஸா தொடங்கப்பட்டது. அதன் தொடக்க மாணவிகளில் எனது தாயாரும் ஒருவர் ஆவார். 1929-ல் இந்த மத்ரஸாவில் மொத்தம் 7 மாணவிகள் மவ்லவி தேர்வை எழுதினார்கள். அதில் அனைவரும் வெற்றி பெற்றனர். அதில் எனது தாயாரும் அடங்குவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தமது பிள்ளைகளின் ஆமீன் வைபவத்தின் போது ஒரு கவிதையை இயற்றினார்கள். அது துஆவினால் நிறைந்ததாகும். அதில் சில பெரிய பிள்ளைகளையும் குறிப்பிட்டுள்ளார்கள். எனது தாயார் ஹஸ்ரத் நாஸிரா பேகம் சாஹிபா அவர்களையும் அதில் குறிப்பிட்டுள்ளார்கள். அதில் இவ்வாறு கூறுகிறார்கள்:

எனது நாஸிரா, ஓர் உன்னதமான நட்சத்திரம் ஆவார்.
ஞானமிக்க, கடமை உணர்வு கொண்ட ஒரு தூய முத்து ஆவார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ள இந்த சிறப்புகள் யாவும் அவர்கள் தந்தை என்பதால் மட்டும் எடுத்துக் கூறவில்லை. மாறாக, எனது தாயாருடன் சேர்ந்து வேலை பார்த்த லஜ்னா உறுப்பினர்கள் கூட இதை உண்மைப்படுத்துகின்றனர். அவர்கள் என் தாயாருடன் வெகு நீண்ட காலம் பணி புரிந்து வந்தார்கள். இவர்களுடன் இணைந்து பணிபுரிந்த முந்தைய தலைவி எழுதுகிறார்கள். இவர்களுக்கு லஜ்னாவிற்கு தர்பிய்யத் வழங்க வேண்டும் என்பதில் அதிக கவனம் இருந்தது. இதற்காக புதிய புதிய வழிகளை யோசித்துக் கொண்டிருப்பார்கள். புதிய திட்டங்களை செயல்படுத்தி வந்தார்கள். ரப்வாவின் ஒவ்வொரு பெண்ணும் தர்பிய்யத்தின் அடிப்படையில் மிகவும் உயர்ந்த தரத்தில் இருக்க வேண்டும் என்று தாம் விரும்புவதாக என்னிடம் சொன்னார்கள். பலமுறை அவர்கள் பெண்களிடம் பர்தா விஷயத்தில் ஏதாவது பலவீனத்தைக் கண்டால் அல்லது அஹ்மதி பெண் கண்ணியத்திற்கு மாற்றமாக நடப்பதைப் பார்த்தால், அங்கேயே அவர்கள் மிகவும் அன்பாக அறிவுரை கூறுவார்கள். ஒரு அஹ்மதி பெண்ணின் கண்ணியத்தின் தரம் எவ்வாறு இருக்க வேண்டுமென்று புரிய வைப்பார்கள். பர்தா சம்பந்தமாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் ஆற்றிய உரை ஒன்றின் சிறிய பகுதியை உங்கள் முன்னால் வாசித்துக் காட்ட விரும்புகிறேன். ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் கிலாஃபத் பதவியேற்றதும் முதல் ஆண்டு மாநாடாகும் அது. 1982 ஆம் ஆண்டு மாநாடு நடந்தது. அப்போது லஜ்னாவின் மாநாட்டுத் திடலில் அவர்கள் உரை நிகழ்த்தினார்கள். அதில் பர்தா சம்பந்தமாக கூறினார்கள். இது தொடர்பாக அவர்கள் எனது தாயாரை நினைவு கூர்ந்து இவ்வாறு கூறினார்கள். எனது ஒரு சகோதரி உள்ளார்கள். அவர்களுக்கு தொடக்கத்திலிருந்தே பர்தாவைப் பேண வேண்டும் என்பதில் மிகவும் கவனம் காட்டி வருகிறார்கள். ஏனென்றால் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் பிள்ளைகளின் தொடக்கக்கால தர்பிய்யத்தைப் பெற்ற தலைமுறையைச் சார்ந்தவர் ஆவார். அவர்கள் வீட்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் என்ன செய்வதைக் கண்டார்களோ, பெண்கள் வீட்டிலிருந்து வெளிவருவதைக் கண்டார்களோ அதே போன்று அவர்களுடைய இயல்பும் பதிந்து விட்டது. இதிலிருந்து அவர்களின் கவனம் மாறவே முடியாது. இவர்களைப் பற்றி நமது சில பெண்கள் இவர் பழைய காலத்து பெண்மணி ஆவார் என்று நினைக்கிறார்கள். எனவே தம்மை ஒன்றும் சொல்லக் கூடாது என்று கூறுகின்றனர். இவர்கள் பழைய காலத்து மக்களாவர். இவர்களுக்கு பைத்தியம் பிடித்து விட்டது. இவர்கள் இப்படியெல்லாம் பேசத்தான் செய்வார்கள் என்று நினைக்கின்றனர். பழைய காலம் என்றால் எந்தக் காலம்? எனக்குத் தெரிந்த பழைய காலம் என்பது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் காலமாகும். எனவே இவர்களைப் பார்த்து பழைய காலத்தவர் என்று கூறி ஏதாவது சொல்ல நினைத்தால் இது அவரது விருப்பமாகும். அவருடைய இந்தப் பிரச்சனை இறைவனைச் சார்ந்தாகும். ஆனால் எனது சகோதரி உண்மையிலேயே இறையச்சத்தில் நிலைநின்றவாறு இதில் கடினத்தை மேற்கொண்டார்கள். லஜ்னா தலைவியாக எனது தாயார் நீண்ட காலம் பணியாற்றினார்கள். அவர்களது தலைமையில் ரப்வாவின்

தரம் எப்போதும் பாகிஸ்தானின் எல்லா மஜ்லிஸ்களை விடவும் உயர்வானதாக இருக்க வேண்டும் என்று முயற்சி செய்வார்கள். முதலிடம் வரவேண்டும் என்பதற்காக அல்ல. சில தலைவிகள் சில கிளை அமைப்புகள் கிளை தலைவர்கள், காயித்மார்கள் அல்லது ஸயீம்மார்கள் செய்வதைப் போன்று அல்ல. மாறாக ரப்வாவில் காலத்தின் கலீஃபா இருக்கிறார்கள். எனவே விளக்கிற்கு அடியில் இருள் இருக்கும் என்று யாரும் ஜாடையாகக் கூட சொல்லிக் காட்டிவிடக் கூடாது. கலீஃபா இருந்தும் அவர்களின் தகுதி மற்றவர்களை விட பின்தங்கியதாகும் என்று கூறிவிடக் கூடாது என்பதற்காகவும் அவ்வாறு செய்தார்கள். அதுமட்டுமல்ல. இறைவனின் விருப்பத்தைப் பெற வேண்டும் என்ற குறிக்கோளும் கொண்டிருந்தார்கள்.

எனக்கு கடிதம் எழுதிய ஒரு பெண்மணி இவ்வாறு எழுதுகிறார்கள். அவர்கள் எடுக்கும் முடிவு மிகவும் தொலைநோக்கு பலன் கொண்டவையாக இருந்தவை. கண்டிப்பாக ஆலோசனை கேட்பார்கள். அவற்றைக கூறுபவர்களின் ஆலோசனையை மதிப்பார்கள். மவ்லானா நூருல் ஹக் சாஹிபின் மனைவி எழுதுகிறார்கள். நான் முஹல்லாவின் சதர் ஆக வெகு காலம் இருந்திருக்கின்றேன். தஃலீம் மற்றும் தர்பியத்திலும் கல்வி மேம்பாட்டிற்காகவும் துர்ரே ஸமீன் அல்லது கலாமே மஹ்மூதிலிருந்து ஒவ்வொரு கூட்டத்திற்கு வரும் போதும் இரண்டு கவிதை வரிகளை மனனம் செய்து வர வேண்டும் என்று ஒவ்வொரு உறுப்பினரிடமும் கூறியிருந்தார்கள். இதனால் கவிதையின் மூலம் எங்களுக்கு அறிவும் ஆன்மீகமும் பெறுகியது. அதே வேளையில் இஜ்திமாக்களின் போது கவிதைப் போட்டியில் ரப்வா லஜ்னா முதலிடத்தை வகித்து வந்தது. அவர்களுக்கும் அதிக கவிதைகள் மனனமாக இருந்தது. பொதுவாக இது எனக்கும் ஞாபகம் உள்ளது. எனது தாயாருக்கு பல கவிதைகள் மனனமாக இருந்தது.

இம்ரான் சாஹிபின் மனைவி எனக்கு எழுதியுள்ளார்கள். ஒருமுறை சில பெண்களுடன் அவர்கள் ஜமாஅத் சுற்றுப் பயணத்திற்காக என்னுடைய தாயாருடன் சியால்கோட் செல்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது கார் அல்லது வேனில் சென்றார்கள். அதில் செல்லும் போது நாம் இங்கும் அங்கும் உள்ள விஷயங்களைப் பேசி வருவதற்குப் பதிலாக கவிதைப் போட்டி நடத்தலாம்; பயணமும் நன்றாக இருக்கும் அதே வேளையில் வீணான அடிப்படையிலிருந்தும் தவிர்ந்திருக்கலாம் என்று கூறினார்கள். அவ்வாறே பயணத்தின் போது கவிதைப் போட்டி நடந்தது அனைவரும் அதை ரசித்தார்கள்.

இங்கு நான் இன்னொரு விஷயத்தையும் கூறுகிறேன். எனது தந்தையார் மிர்ஸா மன்சூர் அஹ்மது சாஹிப் அவர்களுக்கும் குறிப்பாக துர்ரே ஸமீன் நூலில் பல கவிதைகள் மனனமாக இருந்தது. ஏ குதா ஏ கார்ஸாஸ் வோ ஏப் போஷ்ஷோ கிர்திஹார் என்ற மிக நீண்ட கவிதை அவர்களுக்கு முழுவதுமாக மனனமாக இருந்தது என்று நான் எண்ணுகிறேன். நாங்கள் பயணத்தில் செல்லும் போது கவிதைப் போட்டி தொடங்கி விடும். தந்தையார் ஒரு அணியாகவும் தாயார் இன்னொரு அணியிலும் இருப்பார்கள். குழந்தைகளாகிய எங்களுக்கும் ஆர்வம் வர வேண்டும் என்பதற்காக அவர்களோடு எங்களையும் சேர்த்துக் கொள்வார்கள். அதே போன்று எனது தாயாருக்கு கஸீதாவும் மனனமாக தெரியும். அவர்களது கடைசி காலத்தில் நினைவு குறைவதை அவர்கள் உணர்ந்தார்கள். எனவே சில கவிதை வரிகள் அல்லது சில சொற்கள் நினைவில் இருக்காது. உடனடியாக ஞாபகம் வராது. தந்தையாரின் வஃபாத்திற்குப் பிறகு பேத்திகள் எனது தாயாருடன் தூங்குவார்கள். அவர்களிடம் கஸீதா புத்தகத்தைக் கொடுத்து விட்டு இவர்கள் மனனமாக கஸீதாவை ஓதுவார்கள். தினமும் இது அவர்களது நடைமுறையாக இருந்தது. 70 கஸீதாக்களையும் முதலில் படிப்பார்கள். யா அய்ன ஃபய்லில்லாஹி வல்இர்ஃபானி..... என்று தொடங்கும் கஸீதாவை முழுவதுமாக ஓதி விட்டு தூங்குவார்கள். அவர்களது கடைசி காலத்திலும் கூட அவர்களுக்கு ஓரிரு வரிகள் மட்டும் மறந்திருந்தது. மற்றபடி கஸீதா முழுவதும் அவர்களுக்கு மனனமாக இருந்தது. அதே போன்று திருக்குர்ஆனையும் நான் ஏற்கனவே குறிப்பிட்டதற்கேற்ப மிகவும் சிறந்த முறையில் கவனத்துடன் ஓதி வந்தார்கள். சில நேரம் வீட்டு வேலைகளை முடித்தவுடன் வீட்டில் வேலைகள் இல்லை என்பது கிடையாது. வீட்டில் வேலை செய்யும் பெண்களுக்கு உதவி செய்து வந்தார்கள். பல்வேறு பணிகளை மிகவும் ஆர்வத்துடன் செய்து வந்தார்கள். லஜ்னாவின் பணிகளும் உடனுக்குடன் செய்து வந்தார்கள். இந்தப் பணிகள் எல்லாவற்றையும் முடித்த பின்னரும், சுபுஹ் தொழுகை தொழுத பின்னரும் திருக்குர்ஆன் ஓதுவார்கள். இது தவிர பகல் 10.00 மணி அல்லது 11.00 மணிக்கு ஒரு மணி நேரம் அல்லது ஒன்றரை மணி நேரங்கள் திருக்குர்ஆன் ஓதி வருவதை

நான் பார்த்துள்ளேன். அவர்கள் திருக்குர்ஆனை மிகவும் கவனமாக ஓதி வந்தார்கள். அவர்கள் ஆழமாக சிந்தித்ததை நானும் பார்த்துள்ளேன். ஆனால் தேவையில்லாமல் தமது அறிவுத் திறனை வெளிப்படுத்தும் பழக்கம் அவர்களுக்கு கிடையாது. ஆனால் மிகவும் அதிகமாக படித்திருந்தார்கள். அவ்வாறே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களையும் அதிகமாக சிந்தித்து வாசித்து வந்தார்கள். அவர்கள் மவ்லவிக்கான தேர்வு எழுதி அதில் தேர்ச்சி பெற்றிருந்தார்கள் என்று நான் முன்னதாகவே குறிப்பிட்டேன். அரபி கற்றிருந்தார்கள். எனவே அரபி நூல்களையும் வாசிப்பார்கள். அவர்களுக்கு அரபி நன்றாகத் தெரியும்.

பிறருக்காக அனுதாப உணர்வு கொண்டவர்கள் ஆவார்கள். தமது தகுதிக்கு உட்பட்டு எவ்வளவு உதவி செய்ய முடியுமோ அவ்வளவு உதவி செய்து வந்தார்கள். ரொக்கமாகவும் பொருளாகவும் பிறருக்கு வழங்கி வந்தார்கள். மேலும் இந்த நபர் உதவி செய்யத் தகுந்தவர் இவருக்கு உதவுங்கள் என்று பிறருக்கும் அனுதாப உணர்வைத் தூண்டி வந்தார்கள். இதன் காரணமாக அவர்களோடு நெருங்கிய தொடர்புடைய வசதி படைத்தவர்கள் இவர்களிடம் பணத்தைக் கொடுத்து நீங்களே இதே தேவையுடையவர்களுக்கு பிரித்துக் கொடுத்து விடுங்கள் என்று கூறி தொகையை இவர்களிடம் கொடுப்பார்கள். மிக நீண்ட காலம் ரப்வாவின் சதராகவும் இருந்துள்ளார்கள். எனவே பல தெருக்களில் சென்று அங்கு கூட்டங்களில் கலந்து கொள்வதுண்டு. எனவே பல இடங்களில் வசிக்கும் ஏழைகளுடன் தனிப்பட்ட முறையிலும் இவர்கள் பழகி வந்தார்கள. அவர்களின் சூழ்நிலையை நன்கு அறிந்திருந்தார்கள். சவுத்ரி ஹமீதுல்லாஹ் சாஹிப் எனக்கு கூறினார்கள். இவர் இம்தாத் கந்தும் கமிட்டியின் சதர் ஆக இருந்திருக்கிறார்கள். ரப்வாவின் சதர் லஜ்னாவின் சார்பாக இன்னொருவர் உதவி கிடைக்க வேண்டும் என்று சிபாரிசு கடிதம் வந்தால் அது முழு அளவில் ஆராய்ந்த பிறகு தான் சிபாரிசு வந்துள்ளது என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கும். இதை மேற்கொண்டு ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவையில்லை.

அவர்களது தலைமை நிர்வாகம் மற்றும் அலுவலகத்தோடு முடிவடையவில்லை. மாறாக ரப்வாவின் லஜ்னா தலைவி என்ற அடிப்படையில் ஏறக்குறைய ஒவ்வொரு வீட்டினருடன் அவர்களுக்கு தனிப்பட்ட தொடர்பும் இருந்தது. தலைமையகத்தின் லஜ்னாவின் கீழ் ரப்வாவின் லஜ்னா செயல்பட்டு வந்தது. ஜனவரி 1953 -ல் ரப்வாவின் லஜ்னா பிரிவை மேலிடத்தின் லஜ்னா அமைப்பை விட்டு விலக்க வேண்டும் என்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால் ரப்வாவின் சதர் மேலிடத்தின் செயற்குழுவில் உறுப்பினராக இருப்பார்கள் என்றும் தீர்மானத்தில் இருந்தது. இந்த தீர்மானத்தின் அடிப்படையில் யாரை தலைவியாக்க வேண்டும் என்று ரப்வாவின் முஹல்லாக்களில் கருத்து கேட்கப்பட்டது. அனைவரும் ஏகமனதாக சாஹிப் ஸாதி நாஸிரா பேகம் சாஹிபாவை தலைவியாக ஆக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தார்கள். இது லஜ்னாவின் வரலாற்றில் எழுதப்பட்டுள்ளது. இந்த கருத்துக்களின் அடிப்படையில் அவர்கள் லஜ்னா தலைவியாக நியமிக்கப்பட்டார்கள். ஏறக்குறைய 1988 அல்லது 89 வரை அவர்கள் தலைவியாக இருந்தார்கள். அதன் பின்னர் அவர்கள் தமது உடல்நலக் குறைவின் காரணமாக வருத்தம் தெரிவித்தார்கள். இருந்தபோதிலும் ஒரு சாதாரண லஜ்னா உறுப்பினர் என்ற அடிப்படையில் பணிகளைச் செய்து கொண்டே இருந்தார்கள். அவர்கள் கித்மத்தே கல்க் செயலராக இருந்து பணிபுரிந்தார்கள். அவர்களின் தலைமையில் ரப்வாவின் லஜ்னா ஏறக்குறைய எல்லாத் துறைகளிலும் மிகவும் சிறப்பு மிகு தரத்தை அடைந்திருந்தது.

எனக்கு தெரிந்தவர்களிடமிருந்து இரங்கல் கடிதம் வந்து கொண்டிருந்தது. அதில் ஏறக்குறைய எல்லா கடிதத்திலும் ஒரு விஷயம் காணப்படுகிறது. அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் அவர்களைச் சந்திக்கச் சென்ற போதெல்லாம் மிகவும் சிரித்த முகத்துடன் எங்களைச் சந்திப்பார்கள். விருந்தோம்பல் செய்வார்கள். சீதோஷ்ன நிலைக்கேற்ப தகுந்த பொருட்களை விருந்திற்காக முன் வைப்பார்கள். குழந்தைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். போதுமென்ற மனப்பான்மை கொண்டவர் ஆவார்கள். முகத்தைப் பார்த்து நிலைமையை அனுமானித்து அதன்பின் நலம் விசாரிப்பார்கள். துஆ மற்றும் தூய்மையை மேற்கொள்ள கவனமூட்டுவார்கள். சந்ததிகளை தர்பிய்யத் கொடுத்து வளர்க்கும் முறையிலும் துஆ செய்யுமாறு கவனமூட்டுவார்கள் என்று எல்லாரும் எழுதியுள்ளார்கள்.

விருந்தோம்பல் செய்வதைப் பற்றி இங்கு கூறப்பட்டது. எனவே இதில் ஒரு சிலவற்றை நானும் தெரிவிக்கிறேன். என் தாயார் மிக நீண்ட காலம் லஜ்னாவின் தலைவியாக இருந்தார்கள். அப்போது பல்வேறு முஹல்லாவின் தலைவிகளும், செயற்குழுவின் உறுப்பினர்களும் ஒன்றுசேர்ந்து கூட்டம் நடத்துவார்கள். இந்த கூட்டங்கள் மிக நீண்ட காலமாக எங்கள் வீட்டில் வைத்துதான் நடந்து வந்தன. எங்கள் வீட்டின் திண்ணை மிகவும் பரந்த இடமாகும். குறைந்தபட்சம் 35, 40 அடி திண்ணை பரப்பு இருக்கும். அதில் கூட்டம் நடந்து வந்தது. கூட்டம் நடக்கும் நாளன்று அஸர் தொழுகை முடிந்ததும் உடனடியாக வீட்டை விட்டு நாங்கள் வெளியேற வேண்டியதிருந்தது. ஏனெனில் எல்லா அறைகளின் வழியும் அடைக்கப்பட்டு விடும். வீட்டை லஜ்னாக்கள் ஆக்கிரமித்திருப்பார்கள். அறைக்குள் இருந்தால் பின்னர் இரண்டு மணி நேரங்கள் அறைக்குள்ளேயே இருந்தாக வேண்டியது வரும். ஏனெனில் வேறு வழியில்லை. கூட்டத்தில் 150, 200 பெண்கள் கலந்து கொள்வார்கள். அப்போது தேனீர் அல்லது சர்பத் சீதோஷ்ன நிலைக்கேற்ப தேவையானதை வழங்குவார்கள். அதோடு திண்பண்டம் ஏதாவது கொடுக்கப்படும். இந்த ஏற்பாடுகள் அனைத்தையும் எனது தாயார் சுயமாக செய்வார்கள்.

விருந்தோம்பல் தொடர்பாக என்னுடன் படித்த எனது வகுப்புத் தோழர் ஒருவர் எழுதுகிறார்: ஒருமுறை நான் உன்னுடன் அமர்ந்திருந்தேன். அப்போது ஒரு ஹாஜி சாஹிப் அடிக்கடி நமது வீட்டிற்கு வந்து போவார். அவர் வெளியே உலாவிக் கொண்டிருந்தார். சயீத் சாஹிப் கூறுகிறார்கள்: எனது தாயார் என்னை அழைத்து ஹாஜி சாஹிப் வந்துள்ளார்கள். அவரை அழைத்து வந்து உள்ளே உட்கார வைத்து சாப்பிடுவதற்கு ஏதாவது கொடு என்று கூறினார்கள். இவ்வாறு விருந்தோம்பல் செய்வதில் அதிக ஆர்வம் கொண்டவர்களாக இருந்தார்கள்.

அனுதாபம் காட்டக் கூடியவர்கள் ஆவார்கள் என்று கூறும் போது ஒருவர் எனக்கு கடிதத்தில் இவ்வாறு எழுதுகிறார்: என்னுடைய வீட்டின் சூழ்நிலை சரியில்லை. எனது பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்ப நான் முயற்சி செய்து வருகிறேன் என்பதை அறிந்து ஒரு நாள் எனக்கு ஒரு தொழுகை விரிப்பை கொடுத்து அனுப்பினார்கள். அதில் எனக்காகவும் எனது பிள்ளைகளுக்காகவும் அதிகமாக துஆ செய்துள்ளதாகவும் தெரிவித்தார்கள். அதோடு இன்ஷா அல்லாஹ் எல்லா பிள்ளைகளும் வெளிநாடு செல்வதற்கு ஏற்பாடாகி விடும். கவலைப்படாதே என்று கூறி அனுப்பினார்கள். அதன் பிறகு இறைவன் வழக்கத்திற்கு மாறான முறையில் ஏற்பாடு செய்தான். இதனால் எல்லா பிள்ளைகளும் வெளிநாடு சென்று விட்டார்கள். ஒரு மகனுக்கு மட்டும் ஏற்பாடு ஆகாமல் இருந்தது. அவனுக்கும் கொஞ்ச காலத்திற்கு முன் விசா கிடைத்து விட்டது. நல்ல பெண்கள் துஆ செய்வார்கள். ஆனால் அனுதாப உணர்வு மிகுந்திருந்தது. எனது நிலை சரியில்லை என்று யாரோ சொன்னதைக் கேட்டு துஆ செய்தார்கள். அதை எனக்கு அனுப்பியும் வைத்தார்கள் என்று அவர் எழுதுகிறார்.

ஒருமுறை எனது தாயார் என்னிடம் கூறினார்கள். அவர்கள் ஒரு கனவை என்னிடம் சொன்னார்கள். அந்தக் கனவு எனக்கு ஞாபகம் இல்லை. ஆனால் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களைக் கனவில் கண்டதாக அவர்கள் கூறியது எனக்கு நன்றாக ஞாபகம் உள்ளது. ஒருமுறை ஜெர்மனியின் எதிர்கால வளர்ச்சியைப் பற்றியும் ஜமாஅத்திற்குக் கிடைக்கும் வெற்றியைப் பற்றியும் ஒரு கனவை எனக்கு கூறினார்கள். இந்த முறை நான் ஜெர்மனிக்கு சுற்றுப்பயணம் சென்றிருந்த போது ஜமாஅத்தின் விளைவையும் தொடர்பையும் பார்த்தேன். அப்போது எனது தாயார் கண்ட கனவு எனக்கு நினைவில் வந்தது. பிரகாசமான எதிர்காலத்தின் பக்கம் நாம் எடுத்து வைக்கும் அடியாக இது இருக்க இறைவன் அருள்புரிவானாக! மேலும் வழிகள் திறந்து கொண்டே செல்லட்டுமாக!

எனது தாயாரின் இன்னொரு சிறப்பம்சம் அவர்கள் சந்தாவின் கணக்குகளை மிகவும் கவனத்துடன் பேணுவார்கள். அவர்களின் சொத்துக்களிலிருந்து அவர்களுக்கு என்ன வருமானம் வந்தாலும் முதலில் வஸிய்யத் சந்தா மற்றும் ஜல்ஸாவின் சந்தாவை எடுத்து வைப்பார்கள். பின்னர் தஹ்ரீகே ஜதீத், வக்ஃபே ஜதீத் சந்தாவிற்கு அவர்கள் கொடுத்த சந்தாவை பூர்த்தி செய்வார்கள். அதன் பிறகு இன்னும் பிற விருப்பச் சந்தாக்களில் அவர்களுக்குரிய பங்கை அவர்கள் கொடுத்து விடுவார்கள். நான் அங்கு இருந்த வரை

சந்தாவின் கணக்குகளை என்னிடம் ஒப்படைத்துச் சரிபார்க்கச் செய்வார்கள். சந்தாவையும் என்னிடம் கொடுத்துக் கொடுக்கச் சொல்வார்கள். கணக்கு சரியாகி விட்டதா? என்று மீண்டும் மீண்டும் கேட்டு குறைவாகச் சந்தா செலுத்தி விடக் கூடாது என்று கூறுவார்கள். பல்வேறு சொத்துக்களிலிருந்து அவர்களுக்கு பல்வேறு வகையில் வருமானம் வந்தது. ஏதாவதொரு இடத்திலிருந்து வந்த வருமானத்தில் கணக்குத் தவறாகி குறைவாக சந்தா செலுத்தி விட்டாலும் அதை அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து கணக்கை சரிசெய்து இன்னும் இவ்வளவு தொகை சந்தா கொடுக்க வேண்டும் என்று கூறினால் அதை உடனடியாக செலுத்தி விடுவார்கள். அதே போன்று சந்தா மஜ்லிஸையும் தமது வருமானத்திற்கேற்ப கொடுத்து வந்தார்கள். பொதுவாக மக்கள் இதில் கவனக் குறைவு காட்டுகிறார்கள். எனது கருத்தின்படி வருமானத்தின் அடிப்படையில் அதிகமாக சந்தா இவர்களின் சந்தாவாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் மிகவும் நுட்பமாகக் கணக்குப் பார்த்து வந்தார்கள்.

டாக்டர் நூரி சாஹிப் எனக்கு இரங்கல் கடிதம் எழுதினார்கள்: 1999 –ல் நான் சிறைச்சாலை சென்று பின்னர் விடுதலை ஆன பிறகு நூரி சாஹிப் என் தாயாருக்கு வாழ்த்து தெரிவித்து கடிதம் எழுதினார்கள். அதற்கு பதில் எழுதும் போது எனது தாயார் இவ்வாறு எழுதுகிறார்கள்.

நூரி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரகாத்துஹு உங்களது கடிதம் கிடைத்தது. அதில் மஸ்ரூர் சுகமாக விடுதலை அடைந்து திரும்பியதற்காக மகிழ்ச்சியை நீங்கள் வெளிப்படுத்தியுள்ளீர்கள். இறைவன் மிக அதிகமாக அருள் புரிந்துள்ளான். எதிரிகளின் திட்டம் மிகவும் அபாயகரமாக இருந்தது. இறைவன் தனது அருளால் தனது உண்மையை வெளிப்படுத்தியுள்ளான். இதற்கு எவ்வளவு அதிக நன்றி கூறினாலும் அது குறையாகும். ஏறக்குறைய ரப்வா வாழ் மக்களும் ரப்வாவிற்கு வெளியில் வசிப்பவர்களும் மிக அதிகமாக வேதனையுடன் துஆ செய்துள்ளார்கள. இறைவன் அவர்களின் துஆக்களை ஏற்றுக் கொண்டான். அல்ஹம்துலில்லாஹ். சும்ம அல்ஹம்துலில்லாஹ். வருங்காலங்களிலும் அல்லாஹ் அனைவரையும் பாதுகாப்பான்.

இது அவர்களின் பணிவாகும். நன்றி உணர்வாகும். தாய் என்ற முறையில் நானும் அதிகமாக துஆ செய்தேன் என்று கூறவில்லை. நிச்சயமாக அவர்கள் எனக்காக அதிகமாக துஆ செய்திருப்பார்கள். ஆனால் ஜமாஅத் உறுப்பினர்களின் துஆவிற்கு அவர்கள் அதிக முக்கியத்துவம் வழங்கினார்கள். துஆவில் அவர்கள் சுயநலம் காட்டவில்லை. இறைவன் என்னை எனது குழந்தைகளையும் பாதுகாப்பானாக என்று கூறவில்லை. மாறாக அனைவரையும் தனது பாதுகாவலில் வைப்பானாக என்று கூறினார்கள். எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்திற்கு கிடைத்துள்ள சிறபம்சமாகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கைகளால் தர்பிய்யத் பெற்றதன் காரணமாக அவர்கள் இரட்சிப்பை வெளிப்படுத்தினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் தொடர்புடைய பல சம்பவங்கள் உள்ளன. அது இப்போது எடுத்துக்கூற முடியாது. அவர்களது இன்டர்வியூ வெளியாகி உள்ளது. அதை நீங்கள் கேட்கலாம். அல்லது படித்துத் தெரிந்து கொள்ளலாம். அவர்களது உணர்ச்சியின் மீது அவர்களுக்கு உறுதியும் அதிக கட்டுப்பாடும் இருந்தது. ஆனால் எனது மகன் இரண்டு மூன்று வருடங்கள் முன்பு அங்கு சென்றிருந்த போது என்னைப் பற்றிப் பேசும் போது மிகவும் உணர்ச்சிவசப்பட்டார்கள். இறைவன் அவர்களது எல்லா துஆக்களையும் எனக்காகவும் எனது சகோதர சகோதரிகளுக்காகவும் எங்களது சந்ததிகளுக்காகவும் ஏற்றுக் கொள்வானாக. கிலாஃபத்திற்குப் பிறகு என்னோடு உள்ளத் தொடர்பில் சிறப்பான மாற்றம் தென்பட்டது. தொலைபேசியில் என்னுடன் உரையாடும் போது நான் அதை உணர்ந்தேன். அவர்களுக்கு எனது நிலை நன்றாகத் தெரியும். தாயை விட வேறு யாரும் பிள்ளையின் நிலையை அதிகம் அறிந்திருக்க முடியாது. எனது பழக்கவழக்கம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நான் பேசினால் மிகவும் சுருக்கமாக பேசுவேன். அதிகம் பேசமாட்டேன். அல்லாஹ் உனது நாவிலும் உனது உரையிலும் பரக்கத் வழங்குவானாக என்று கூறுவார்கள். குறிப்பாக நான் நஃபில் தொழுது வருகிறேன் என்றார்கள். சஜ்தாவில் எல்லா தொழுகையிலும் குறைந்தது ஒரு சஜ்தாவில் உனக்காக துஆ செய்கிறேன் என்றார்கள். ஆனால் 2005-ல் காதியானில் வைத்து கிலாஃபத்திற்குப் பிறகு முதன்முறையாக அவர்களைச் சந்தித்தேன். அப்போது எனக்கு மிகவும் வியக்கத்தக்க நிலை ஏற்பட்டது.

மிகவும் வித்தியாசமான அனுபவமாக இருந்தது. கிலாஃபத்தின் மீது அவர்களுக்கு இருந்த தொடர்பு மற்றும் முந்தைய கலீஃபாக்களுடன் அவர்களுக்கு இருந்த விசுவாச உணர்வு அவர்களது கண்களில் எனக்காகவும் தென்பட்டது. அது என்னுடன் மகன் என்ற தொடர்பு அல்ல. அது கிலாஃபத்தின் தொடர்பாகும். அதில் கண்ணியமும் மரியாதையும் தென்பட்டது.

மீர் மஹ்மூத் சாஹிபின் மகன் டாக்டர் இப்ராஹீம் சாஹிப் அவர்களிடம் ஊரில் இன்டர்வியூ எடுத்தார்கள். பல்வேறு பழைய சம்பவங்களைப் பற்றி பேசினார்கள். அப்போது என்னைப் பற்றியும் பேசினார்கள். அவர் எனக்கு கேசட்டை அனுப்பியுள்ளார்கள். அதில் என்னைப் பற்றி கூறும்போது எனக்கு மரியாதை கொடுப்பதற்குக் காரணம் அவர் காலத்தின் கலீஃபா ஆவார் என்று கூறினார்கள். எனது அன்பு மிகுந்த தாயார் இந்தத் தொடர்பிற்கு உலகத்தின் மற்ற எல்லா தொடர்பை விடவும் அதிக முன்னுரிமை வழங்கினார்கள். கிலாஃபத்தின் தொடர்பு மகன் என்ற உறவை மிஞ்சி விட்டது. நான் அவர்களை சந்திக்கச் சென்ற போது அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்களின் கண்களில் வெளிச்சம் தென்பட்டது. முகம் மலர்ந்திருந்தது. காதியானில் நான் இருந்த போது எனக்கு மாநாட்டின் நிகழ்ச்சிகளை முடித்து விட்டு உபரி நேரம் கிடைக்கும் போதெல்லாம் தாயாரிடம் சென்று அமர்வேன். அவர்களை உட்கார வைத்து வெகு நேரம் வரை பேசிக் கொண்டிருப்பேன். ஆனால் காதியானில் இருந்த காலம் வெறும் 15 நாட்களுக்காக மட்டும் இருந்தது. அங்கிருந்து பாகிஸ்தான் செல்வதற்காக முன்னதாகவே என்னிடமிருந்து விடை பெற்றுச் சென்றார்கள். துஆ செய்தார்கள்.

மீர் மஹ்மூத் சாஹிபின் இளைய மகன் டாக்டர் ஃபாரூக் சாஹிப் எனக்கு எழுதினார்கள்: ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்களின் வஃபாத்திற்குப் பிறகு நான் இரங்கலுக்காக அங்கு சென்றேன். அப்போது எனக்கு அறிவுரை வழங்கினார்கள். எனக்கு துஆவிற்காக கூறினார்கள். அதோடு புதிய கலீஃபாவாக யார் வந்தாலும் அவரிடம் பைஅத் செய்ய வாய்ப்பு கிடைத்தாலும் அவருடன் மிகவும் உளப்பூர்வமாக தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்றார்கள். எனவே கிலாஃபத்தோடு அவர்கள் தொடர்பு கொண்டிருந்தார்கள். இதற்காக அவர்கள் துஆவும் செய்து வந்தார்கள். அறிவுரையும் கூறி வந்தார்கள். இறைவன் ஒவ்வொரு நொடிப் பொழுதும் அவர்களுக்கு சொர்க்கத்தை வழங்குவானாக! சம்பவங்கள் நான் ஏற்கனவே கூறியது போன்று அதிகம் உள்ளன. இறுதியில் நான் ஒரு சம்பவத்தை மட்டும் கூற விரும்புகிறேன்.

1913 -ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அல்ஃபஸ்ல் பத்திரிகை தொடங்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார்கள். அப்போது ஹஸ்ரத் உம்மே நாஸிர் சாஹிப் இந்தப் பத்திரிகையை தொடங்குவதற்காக முதலீடாக தமது சில நகைகளைக் கொடுத்தார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களுக்கு உதவுவதற்காக ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களின் உள்ளத்தில் ஊக்கத்தை வழங்கியது போன்று எனக்கு உதவி செய்வதற்காக எனது மனைவியின் உள்ளத்தில் இறைவன் ஊக்கத்தை வழங்கியுள்ளான். **குறிப்பாக அந்தப் பத்திரிகையில் முதலீடு செய்வது கிணற்றில் பணத்தைப் போடுவதற்கு சமமாகும் என்பதை நன்கு அறிந்தும் நகையைக் கொடுத்தார்கள்.** இது ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் பணிவான உணர்வாகும். அக்காலக்கட்டத்தில் மிகப் பெரிய கட்டுரையாக இருந்தது. அவர்கள் தமது இரண்டு நகைகளை என்னிடம் கொடுத்தார்கள். அதை விற்று பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்பதற்காக கொடுத்தார்கள். அதில் ஒன்று அவர்களின் தங்க வளையல் ஆகும். இன்னொன்று அவர்கள் சிறு வயதில் அணிந்த வளையலாகும். இதை அவர்கள் தமது உபயோகத்திற்காகவும் எனது மகள் நாஸிரா பேகமின் பயன்பாட்டிற்காகவும் வைத்திருந்தார்கள். நான் அந்த நகையை எடுத்துக் கொண்டு லாஹூர் சென்றேன். அது 475 ரூபாய்க்கு இரண்டு வளையலும் விற்கப்பட்டது. அதை வைத்து அல்ஃபஸ்ல் பத்திரிகை தொடங்கப்பட்டது. அல்ஃபஸ்ல் பத்திரிகையின் வாசகர்கள் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் மகள் மற்றும் எனது தாயாரை பத்திரிகை வாசிக்கும் போது துஆவில் நினைவு கூறுங்கள். அல்ஃபஸ்ல் பத்திரிகையை ஆரம்பிக்கும் போது தாம் அறிந்திருக்கவில்லை. எனினும் அதில் தமது பெற்றோர்களுடன் தாமும் பங்கு வகித்தார்கள். இந்த அல்ஃபஸ்ல் பத்திரிகை இன்றும் இன்டர்நேஷனல் அல்ஃபஸ்ல் என்ற பெயரில்

வெளிவந்து கொண்டிருக்கிறது. இறைவன் இவர்களது பதவிகளை உயர்த்திக் கொண்டே செல்வானாக. அவர்களின் துஆக்கள் எப்போதும் நமக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கட்டுமாக.

ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு இன்ஷா அல்லாஹ் அவர்களின் ஜனாஸா காயிப் தொழ வைப்பேன். இதை தவிர இன்னும் சில ஜனாஸாவும் உள்ளது. ஒன்று, சவுத்ரி நாஸிர் அஹ்மது அவர்களின் ஜனாஸாவாகும். இவர்கள் அரசாங்கப் பணியாளராகவும் இருந்தார். 1981-ல் ஓய்வு பெற்ற பின்னர் ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவர்களை நாயிப் நாஸிர் ஸராஅத் மற்றும் நாயிப் வகீலுஸ் ஸராஅத் பொறுப்பில் அமர்த்தினார்கள். 2003 வரை இந்த தொண்டை இவர் தொடர்ந்து செய்து வந்தார். மிகவும் பணிவுடனும் கடின உழைப்புடனும் இவர் பணியாற்றினார். ஆப்பிரிக்காவின் சில நாடுகளுக்கும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் இவரை அனுப்பினார்கள். சிந்து என்ற இடத்தில் உள்ள நிலம் சம்பந்தமாக என்னுடனும் இவருக்கு நல்ல தொடர்பு இருந்தது. இவர் மிகவும் கண்ணியம் மற்றும் மரியாதை செலுத்துபவராவார். என்னை விட வயதில் மூத்தவர் ஆவார். எனினும் மிகவும் மரியாதையுடன் நடந்து கொள்வார். கல்லூரியில் இவர் பயின்ற போது விடுமுறை நாட்களில் ஹஸ்ரத் மவ்லவி ஷேர் அலி கான் சாஹிபுடன் திருக்குர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதில் உதவி புரிந்துள்ளார்கள். இவ்வாறு திருக்குர்ஆனை மொழிபெயர்ப்பதிலும் இவருக்கு பங்குண்டு. இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். ஒரு மகள் உள்ளார்கள். அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் பொறுமையை வழங்குவானாக. அவர்களது பதவிகளை உயர்த்துவானாக. இவர் இளைஞராக இருந்த போதே தஹஜ்ஜுத் தொழுவதற்கான பழக்கம் கொள்பவராவார். நானும் பார்த்துள்ளேன். பயணத்தின் போது என்னுடன் வரும்போதெல்லாம் இரவு மூன்று மணி அல்லது பிற நேரத்தில் தஹஜ்ஜுத்திற்காக எழுவார்கள். மிகவும் ஈடுபாட்டுடனும் உருக்கத்துடனும் தஹஜ்ஜுத் தொழுவார். இவரது இந்த நன்மையின் காரணமாக இவருடைய குடும்பத்தில் ஸூஃபி நஸீர் அஹ்மத் என்று அழைக்கப்பட்டார். அல்லது அதிகமாக தொழக்கூடிய சவுத்ரி சாஹிப் என்று அழைக்கப்பட்டார். அல்லாஹ் இவரது பதவியை உயர்த்துவானாக.

இது தவிர இன்னொரு ஜனாஸா மிர்ஸா ரஃபீக் அஹ்மது சாஹிப் அவர்கள் உடையதாகும். இவர் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் கடைசி மகனாவார்கள். இவர்களும் நான்கு ஐந்து தினங்களுக்கு முன் வஃபாத் ஆனார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். குறிப்பிடும்படியான ஜமாஅத்தின் தொண்டு ஏதுமில்லை. ஆனால் இறைவன் இவர்களை மன்னிப்பானாக. இவர் மீது கருணை காட்டுவானாக. இவருக்கு மூன்று மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். இறைவனின் அருளால் இவர்கள் அனைவரும் கிலாஃபத்துடன் மிகவும் நல்ல தொடர்பு வைப்பவர்களாக உள்ளனர். இறைவன் இவர்களின் பிள்ளைகளுக்கு பொறுமையை வழங்குவானாக. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தோன்றியதன் நோக்கத்தை முழுமையாக்குபவர்களாக இருப்பார்களாக. இவர்கள் அனைவரது ஜனாஸா காயிப் தொழுகையை இன்ஷா அல்லாஹ் நான் ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு தொழ வைப்பேன்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HADHRAT KHALIFATUL MASIH V**
**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**
**ON 05.08.2011**

Translated by : **Maulavi S. Abdul Qadir**
Published by : **MAJLIS KHUDDAMUL AHMADIYYA**
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
**TELEFAX : 0462 - 2352456**